# ஜி. நாகராஜன் சிறுகதைகளில் பெண்ணிய நோக்கு

# Feminist Perspective in G. Nagarajan's Short Stories

***சு. லாவண்யா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
எஸ். என். எஸ். இராஜலஷ்மி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், இந்தியா

**S. Lavanya**
*Research Scholar, Department of Tamil*
*Dr. S. N. S. Rajalakshmi College of Arts and Science (A), Coimbatore, India*

***முனைவர் இரா. இளங்கோவன்***
ஆய்வு நெறியாளர், உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை,
எஸ்.என்.எஸ். இராஜலஷ்மி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், இந்தியா

**Dr. R. Elangovan**
*Research Guide, Assistant Professor*
*Department of Tamil*
*Dr. SNS Rajalakshmi College of Arts and Science (A), Coimbatore, India*

**Citation**: Lavanya, S. and R. Elangovabn. "Feminist Perspective in G. Nagarajan's Short Studies." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 3, 2025, pp. 66-73.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20068926*

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழ் இலக்கிய வரலாற்றில் புனைகதைகளின் தோற்றம் இலக்கிய வாசகர்களின் பரப்பை பெருமளவில் விரிவுபடுத்தியது. புனைகதைகளின் இரு முக்கிய பிரிவுகளில் ஒன்றான சிறுகதைகள் இலக்கியத் தளத்தை வேறொரு களத்திற்கு இட்டுச்சென்றது உண்மை. சிறுகதைகளின் அளவு, நடை, கையாளப்படும் உத்திகள், அவசர உலகிற்கும் வளைந்து கொடுக்கும் அமைப்பு போன்ற தன்மைகளே சிறுகதை இலக்கியத்தினை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்க காரணங்களாகும். நவீன தமிழ் இலக்கியப் படைப்பாளிகளில் தனித்துவம் வாய்ந்த ஒர் எழுத்தாளர் ஜி நாகராஜன் ஆவார். இவர் 1950-களின் பின்பாதியில் இருந்து 1970-கள் வரை நாவல்களும் சிறுகதைகளும் எழுதிவந்தவர். அதுவரை யாரும் திரும்பிப் பார்க்காத, கவனிக்கத் தவறிய விளிம்பு நிலை மாந்தர்களை தம் கதைகளின் கருப்பொருளாக்கி அவரது வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவதே இவரது படைப்பின் தனிச்சிறப்பு. இவரது 36 சிறு கதைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில சிறுகதைகளில் காண்கின்ற பெண் பாத்திரப்படைப்புகளை பெண்ணிய நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## Abstract

*The emergence of fiction in Tamil literary history significantly expanded the readership of literature. Among the two major divisions of fiction, short stories played a crucial role in transforming the literary landscape. The length, style, narrative techniques, and adaptability of short stories to the fast-paced modern world have contributed to keeping this literary form vibrant. G. Nagarajan is a distinctive writer in modern Tamil literature. From the late 1950s to the 1970s, he wrote novels and short stories. His uniqueness lies in portraying the lives of marginalized individuals—those often overlooked or ignored by society—through his narratives. His works stand out for capturing the essence of these lives in a realistic manner. The purpose of this article is to analyse the depiction of female characters from a feminist perspective in select short stories chosen from his 36 short stories.*

**சிறுகதை இலக்கியம்**

*தமிழ் இலக்கியத்தின் தோற்றக்காலம் என்பது பல நூற்றாண்டுகளுக்கு முந்தையதாயினும் சங்க இலக்கியங்கள், இலக்கண நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் வரையிலான அனைத்து இலக்கிய வடிவங்களும் செய்யுள் நடையையே கொண்டிருக்கின்றன. ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட மேலை நாட்டு இலக்கியங்களின் தாக்கமும், அச்சு இயந்திரங்களின் அறிமுகமும் செய்யுள் வடிவ இலக்கியங்களுக்கு மாற்றாக ஓர் எளிய இலக்கிய வடிவத்தை தேடக் காரணமாயின. அதன் விளைவாக தோன்றிய இலக்கிய வடிவமே உரைநடை இலக்கியம் ஆகும். உரைநடையின் ஆரம்பத்தேவை செய்யுள் வடிவங்களுக்கு உரை எழுதுவதாகவே அமைந்தது. ஆயினும் கி.பி.18ஆம் நூற்றாண்டில் உரைநடை புத்துயிர் பெற்றது. அதன் பின்னர்தான் நாவல், சிறுகதை போன்ற படைப்பிலக்கியங்கள் தோன்றின. நாவல் சிறுகதை இவ்விரண்டும் புனைகதைகளின்* (fiction) *இரு வேறு வடிவமே ஆகும்.*[1]

*நாவல் என்று கூறப்படும் புதின இலக்கியங்கள் மெல்ல செழிப்புறத் தொடங்கிய பிறகு, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலகட்டத்தில் சிறுகதை இலக்கியங்கள் தமிழில் வளரத் தொடங்கின. ஆங்கிலேயக் கல்வியின் தாக்கம், அச்சு இயந்தரங்களின் வருகை, இதழ்கள் மற்றும் பத்திரிகைகளில் சிறுகதைகளுக்கான வரவேற்பு அதிகரிப்பு, வாசகர்கள் ஒரே அமர்வில் படித்து முடிக்கும் வசதி போன்ற பல்வேறு காரணங்கள் தமிழில் சிறுகதைகள் தோன்றக் காரணமாயின.*

**சிறுகதை அமைப்பு வரையறை**

*சிறுகதை என்பது அளவில் புதினத்தை விட சிறியதாக இருக்கும். ஆனால் அதனால் மட்டுமே அது சிறுகதை இலக்கியம் என்று ஆவதில்லை. அதன் கருப்பொருள் அன்றாட வாழ்வை ஒட்டியதாகவும் எளிமையானதாகவும் அமைதல் வேண்டும். இதனையே 'சிறுகதைகள் எளிய கருப்பொருளை கருவாகக் கொள்ளுதலே சிறப்புடையது' என்று சிறுகதையின் தந்தை எனக் கருதப்படும் செகாவ் சொல்கிறார். சிறுகதையின் அமைப்பை ஆராயும்கால், பி. எஸ். இராமையாவின் விளக்கம் தெளிவு தருகிறது. "சிறுகதைகள் அனைத்தும் தொடக்கம், உச்ச கட்டம், முடிவு என்ற ஒரே அமைப்பைக் கொண்டிருந்தாலும் தங்களுக்குள் நுட்பமான வேறுபாட்டினைக் கொண்டிருக்கும்' என்கிறார் இவர்.*[2] *ஆகவே, சிறுகதைகளைப் பொறுத்த வரை, அதன் தலைப்பு, தொடக்கம் மற்றும் முடிவு ஆகியவை முக்கியத்துவம் வாய்ந்தவையாக கருதப்படுகின்றன.*

*எந்த ஒரு படைப்பிலக்கியமும் அதற்கான தனித்தன்மையுடன் விளங்கும் வகையிலேயே சிறப்படைகிறது. அந்த வகையில் ஒரு அதில் கையாளப்படும் "படைப்பாக்க உத்திகளே" அதனை சிறப்புடையதாக்குகிறது. காலந்தோறும் உதிக்கும் ஆயிரக்கணக்கான சிறுகதைகளில் ஒரு படைப்பாளியை மற்றொரு படைப்பாளியிடமிருந்து தனித்து காட்டுபவை அவர்கள் கையாளும் படைப்பாக்க உத்திகளே.*[3]

**பெண்ணியம் - ஓர் ஆய்வு**

*ஓர் இலக்கிய வடிவம் என்பது எப்போதும் ஒரு சமுதாயக் குறிக்கோளுடன் இருக்கும் போது தான் அதன் முழுப்பயன் சமுதாயத்தைச் சென்றடையும். அந்த வகையில் காப்பியங்கள் தொடங்கி நவீன இலக்கிய வகையைச் சேர்ந்த, புதுக்கவிதைகள் என எல்லா இலக்கிய வடிவங்களும் ஒரு குறிக்கோளைத் தாங்கியே வருகின்றன. அதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்ல முனைகின்றன. சமுதாய முன்னேற்றத்திற்கு ஓர்*

*அளவுகோல் பெண்கள் முன்னேற்றம் எனலாம். எனவே பெண்கள் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்ட "பெண்ணியம்" என்பது இலக்கியங்களில் காலந்தோறும் ஒரு பேசு பொருளாகவே இருந்து வருகிறது.*

*ஆங்கிலத்தில்* 'feminism' *என்று வழங்கும் கலைச்சொல்லையே தமிழில் "பெண்ணியம்" என்று வழங்குகின்றோம். பெண்கள் தொடர்பான கோட்பாட்டை வலியுறுத்த பல்வேறு கலைச்சொற்கள் வழக்கில் இருந்தாலும் கருத்து குழப்பத்திற்கு இடம் அளிக்காமல் இருப்பதாலும் சுருக்கச்சொல்லாக இருப்பதினாலும் "பெண்ணியம்" என்ற சொல்லே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலைச்சொல்லாக வழங்கப்பட்டு வருகிறது. பெண்ணியம் என்ற கொள்கையின் ஆகச்சிறந்த அர்த்தம் ஆணை அடக்கி ஆள நினைப்பதோ ஆண்களின் கருத்துக்களை முடக்கிபோடுவதோ அல்ல. ஆணுக்கு எதிரான கருத்துக்களை முன் வைப்பது பெண்ணியத்தின் இலட்சியமல்ல, ஆணுக்கு நிகரான, சமூக நிலையை மீட்டெடுப்பதும், அடக்கி ஆளும் ஆண் சமுதாயத்திடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதே பெண்ணியம் ஆகும் என்ற தெளிவான கருத்தினை பல பெண்ணியவாதிகளும் கல்வியாளர்களும் காலம் தோறும் உறுதி படுத்திக் கொண்டுதான் வருகின்றனர்.*

*பெண்ணியம் அல்லது பெண்ணிலை வாதம் என்பது ஒரே நிலைப்பாட்டினைக் கொண்டதல்ல. அதனுள் பல கருத்தியல்கள் மற்றும் கோணங்கள் உள்ளன. மிதவாதப் பெண்ணியம், தீவிரவாத பெண்ணியம் போராட்ட குணமிக்க பெண்ணியம், புரட்சிகரப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம் போன்றவை அவற்றுள் சில.*[4] *பெண்ணியக் கோட்பாடுகளை சமுதாயத்தில் நிலைநிறுத்த பெண்ணியவாதிகள் கையாளும் முறைமைகளைப் பொறுத்து மேற்க்கண்ட கோணங்கள் வகைமைப் படுத்தப்பட்டுள்ளன எனலாம்.*

**பெண்ணியத் திறனாய்வு**

*பொதுவாக பெண் படைப்பாளர்கள் தன் படைப்புகள் மூலம் பெண்ணியத்தை அணுகுதல், பிற படைப்புகளில் பெண்களில் பாத்திரப் படைப்புகளைக் கையாண்ட விதத்தினை பெண்ணியப் பார்வையில்ல் அணுகுதல் என்ற இரு பார்வை உண்டு.*[5]

*எனவே புனைவுகள் எவையாயினும் அவற்றில் பெண்ணிய நோக்கு என்பது பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஆய்வாளர்கள் எடுத்தாண்ட கருவே ஆகும். அந்த வகையில் 'ஜி நாகராஜன் படைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளில் பெண்ணிய நோக்கு' என்பது இவ்வாய்வின் நோக்கமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.*

**ஜி நாகராஜன் பற்றிய அறிமுகம்**

*ஜி. நாகராஜன் (ஜி. என்) (1 செப்டம்பர் 1929 - 19 பிப்ரவரி 1981), தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் மற்றும் ஆசிரியர் ஆவார். பொதுவாக இலக்கியத்தால் கவனிக்கப்படாத விளிம்புநிலை மனிதர்களை தன் கதையின் முக்கிய கதாப்பாத்திரங்களாக்கி தன் படைப்புகளில் உலாவ விட்டவர் இவர்.*

**இலக்கிய வாழ்க்கை**

*அவருடைய முதல் சிறுகதை "அணுயுகம்" ஜூன் 8, 1957 அன்று "ஜனசக்தி" வார மலரில் வெளியானது. ஜனசக்தி, சாந்தி, சரஸ்வதி போன்ற இடதுசாரி இதழ்களில் ஜி.நாகராஜன் தொடர்ந்து எழுதினார்.*

*பல்வேறு பதிப்பகங்களிருந்தும், ஜி நாகராஜனின் கையெழுத்துப் பிரதிகள் சேர்த்தும் காலச்சுவடு பதிப்பகம் "ஜி நாகராஜனின் படைப்பாக்கங்கள்" என்ற ஒரு புதிய தொகுப்பினை 2023- இல் வெளியிட்டது. இதன் தொகுப்பாசிரியர் ராஜமார்த்தாண்டன் ஆவர். இதில் ஜி நாகராஜனின் இரண்டு நாவல்கள், 36 சிறுகதைகள் (நான்கு நிமிஷக் கதைகள் உட்பட) மூன்று கவிதைகள், உரைநடைப் பகுதியில் கட்டுரைகள், வாசகர் கடிதங்கள், வாசக அனுபவக் கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவை அடங்கியுள்ளன.*

*இம்முப்பத்தாறு சிறுகதைகளில் பெண் கதாப்பாத்திரங்கள் மிளிர்ந்து நிற்கும், பெண் பாத்திரப்படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் சில சிறுகதைகளைப் பற்றிய ஆய்வினை இக்கட்டுரையில் காணலாம். அவை*

1. *கல்லூரி முதல்வர் மிஸ். நிர்மலா (ஞானரதம், ஜுலை 1972)*
2. *தீராக்குறை (சரஸ்வதி)*
3. *மிஸ். பாக்கியம் (சரஸ்வதி, ஆகஸ்டு 1961)*
4. *அக்கினிப் பிரவேசம் (சாந்தி, மார்ச் 1967)*
5. *பூர்வாசிரமம் (சரஸ்வதி, ஜனவரி 1960)*
6. *போலியும் அசலும் (கண்ணதாசன், ஏப்ரல் 1973)*

*இக்கதைகளில் காணப்படும் பெண் கதைமாந்தர்களின் பாத்திரப்படைப்புகளை திறனாய்வு செய்யுங்கால் கையாளப்பட்ட பெண்ணிய விழுமியங்கள்:*

1. *திருமண வாழ்க்கை*
2. *கைம்மை திருமணம்*
3. *கற்பு*
4. *புரட்சிகரப் பெண்ணியம்*
5. *சமத்துவ வாதப் பெண்ணியம்*

**புரட்சிகரப் பெண்ணியம்**

*ஜி நாகராஜனின் 'கல்லூரி முதல்வர் மிஸ். நிர்மலா' (ஞானரதம், ஜுலை 1972) சிறுகதையில் கல்லூரிப் பேராசிரியையாக இருக்கும் நிர்மலா என்ற ஒரு முதிர்கன்னியின் மன உணர்வுகளை உளவியல் ரீதியாக பார்க்கிறார் ஆசிரியர். மிகவும் ஏழ்மையான பின்புலத்தில் இருந்து கஷ்டப்பட்டு வாழ்வில் முன்னேறி தன் குடும்பத்திற்காக தன் வயது, இளமை, சந்தோஷம் என எல்லாவற்றையும் தொலைத்து விட்ட பின் தன் வாழ்க்கையின் வெறுமை அவளைச் சுடுகிறது. சமுதாய மரபுகளை மீறி அக்கல்லூரியில் பணிபுரியும் காதர் எனும் வாட்ச்மேனிடம் நெருங்கிப் பழகி தன் தாபத்தைத் தீர்த்துக் கொள்கிறாள் மிஸ். நிர்மலா. இது ஒரு பெண்ணின் "கட்டுப்பாடற்ற பாலியல் உறவு" என்ற கோட்பாட்டை உணர்த்துவதாக அமைந்துள்ளது.*

*'வருஷம் பூரா இரண்டு சேலை, மூணு ஜம்பர், அத்தனை அவமானமும் எதுக்கு? என்னத்தை சாதித்து விட்டேன். அர்த்தமில்லாத தியாகம். அது தியாகமா? அதுவுமில்லியே! ஒரு வகையில் நிர்பந்தம் தானே! ஒன்றையும் காணவில்லையே!'[6] என்ற எழுத்துக்களில் மிஸ் நிர்மலாவின் உள்மன உணர்வுகளை எழுத்துப்படுத்துகிறார். மேலும் அந்த அதிருப்தியின் விளைவே அவளை மரபு மீற தூண்டியது என்பதையும் ஜி நாகராஜன் பதிவு செய்கிறார்.*

*இதே போன்று 'மிஸ். பாக்கியம்' (சரஸ்வதி, ஆகஸ்டு 1961) என்ற அவரது சிறுகதையிலும் கல்லூரிப் பேராசிரியையாக பணியாற்றும் பாக்கியம் என்ற பாத்திரத்தின் மூலமும் புரட்சி கரப் பெண்ணியக் கோட்பாட்டை கூற முனைகிறார் ஜி. நாகராஜன். இக்கதையில் பாக்கியம்*

*ஒரு முதிர்கன்னி. வாழ்க்கையை காலத்திடம் தொலைத்து விட்டு எதைத் தேடுகிறோம் என்று அறியாமல் தவிப்பவள். தன் கடந்த கால வாழ்வில் பல விசித்திரமான ஆண்களையும் பல கண்ணியமான ஆண்களையும் கடந்து வந்திருக்கிறாள். தன் மாணவிகளில் ஒருத்தியான ரங்கநாயகி தனது அறிவாலும், குணத்தாலும் பாக்கியத்தை கவர்கிறாள். தன் வாழ்வில் நீண்ட நாள் கடுஞ்சுரத்தை தணிக்க ரங்க நாயகியை "சுகிக்கிறாள்" பாக்கியம். உடல் ஜுரம் தணிந்தாலும் மரபினை மீறிய பாக்கியம் செய்வதறியாது வைரத்தை விழுங்கி தற்கொலை செய்து கொள்கிறாள். ஆணாத்திக்க சமுதாயம் இட்ட மரபு வேலிகள் பொருத்தமானவையோ அல்லவோ தெரியாது எனினும் அதில் சலுகை எடுத்துக் கொள்ளவோ, மரபை மீறவோ ஆணுக்கு இருக்கும் வாய்ப்புகள் பெண்ணுக்கு இருப்பதில்லை என்ற நுணுக்கமான கோட்பாட்டை "பாக்கியம்" கதாபாத்திரம் மூலம் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். இன்றைய காலகட்டத்தில் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக பேசப்படும் புரட்சிகர பெண்ணியம், ஓரினச் சேர்க்கை போன்றவற்றை வெளிப்படுத்தும் கருத்தியல்களை அறுபதுகளில் வெளிவந்த இதழ்களில் சிறுகதையாக எழுதிய ஜி நாகராஜனின் முற்போக்கு எழுத்து பெரும் வியப்பை அளிக்கிறது.*

*ஜி நாகராஜனின் மற்றொரு சிறுகதையான "பூர்வாசிரமம்" (சரஸ்வதி, ஜனவரி, 1960) என்ற கதையும் புரட்சிகர பெண்ணியக் கோட்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. ஜி என் நின் படைப்புகளின் அடையாளமே சமூகத்தின் விளிம்பு நிலை மாந்தர்களின் வாழ்வை அதன் சாயம் மாறாமல் படம் பிடித்துக் காட்டுவதே ஆகும். அந்த வகையில் இதுவும் சமூக மதிப்பீடுகளால் ஒதுக்கப்பட்ட ஒரு விலை மாதுவின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் கதையாகும். படைப்பாளி தானே ஒரு கதாப்பாத்திரமாகி பேசுவதாகவும் தன் கண்ணோட்டத்தில் ஒரு விலைமாதுவை எவ்வாறு காண்கிறான் என்று சொல்வதாகவும் இக்கதை அமைகிறது. விலை மாதர்களின் தொழிலையோ அவர்களின் கற்பையோ தன்னுடைய பார்வையில் விமர்சிக்காமல், நியாமும்படுத்தாமல் அவர்கள் போகும் பாதையில் மட்டும் வெளிச்சமிட்டு காட்டுகிறார். இங்கே அவர் நடப்பதை காட்சிபடுத்தும் வேலையை மட்டுமே செய்கிறார். அவற்றை கணிப்பதும் நினைப்பதும் நம் பொறுப்பு; நம் விருப்பு; நம் வெறுப்பு. என்ற போக்கினை உணர்த்துவதாக இவரது படைப்பு உள்ளது.*

**திருமண வாழ்க்கை**

*ஒரு குடும்ப அமைப்பில் குடும்பத்தலைவி என்ற ஒரு பெண்ணின் முக்கியத்துவம் அளப்பரியது. அவளது, உழைப்பு, பொறுப்பு, தியாகம் போன்றவற்றை எந்த ஒரு அளவுகோலும் வரையறுக்க முடியாது. ஆனால் இது இயற்கையாகவே நடந்து விடுவதால் குடும்பத்தில் இருக்கும் உறுப்பினர்களுக்கு குறிப்பாக குடும்பத்தலைவனுக்கு அதன் மதிப்பு விளங்குவதில்லை. தன் தியாகங்களுக்கு கிடைக்காத அங்கீகாரங்களைப் பற்றி அப்பெண் கவலைப்படுவதும் இல்லை. ஜி, நாகராஜனின் "தீராக்குறை" (சரஸ்வதி) என்ற சிறுகதையில் வரும் சோமுப்பிள்ளை மரணப்படுக்கையில் இருக்கும் போது தன் வாழ்வின் பல்வேறு நிகழ்வுகளை அசைபோடுகிறார். தன் சக்தியை மீறி பிள்ளைகளை கரையேற்றிய சோமுப்பிள்ளைக்கு மரணப் படுக்கையில் தான் தன் இன்பதுன்பங்களில் எல்லாம் இடைவிடாமல் பயணித்த தன் மனைவி "பங்கஜத்தைப்" பற்றிய கவலை வருகிறது. அதை காலம் கடந்து உணர்ந்தாலும் பயனில்லை என்ற கவலை அவரை மேலும் இரணப்படுத்துகிறது. எப்படி இந்த சுயநலம் பிடித்த பிள்ளைகளுடன் மீதி வாழ்நாளை அவள் கழிக்கப்போகிறாள் என்ற தீராக்குறையுடனேயே மூர்ச்சை அடைகிறார் சோமுப்பிள்ளை. இக்கதையில் ஒரு ஆண் கதாப்பாத்திரம் வாயிலாக பெண்ணின் பெருமைகளை உணர்த்துவதாக ஆசிரியர்*

படைத்திருப்பது அவரைச் சிறந்த பெண்ணிய நோக்கு உடைய படைப்பாளியாக அடையாளப் படுத்துகிறது. மரணப்படுக்கையில் இருக்கும் சோமுப்பிள்ளை வார்த்தைகளை கூட்டி, மகாலெஷ்மி மாதிரி என் வீட்டுக்கு வந்தே. நீ வலாட்டி நான் இவ்வளவு காலம் இருந்திருக்கவே மாட்டேன். எல்லாம் கனவு போல போயிருச்சு ஒனக்கு நான் ஒண்ணுமே செய்யலே இன்னிக்கு நிலாதரவா நிறுத்திட்டு[7] என்று கடைசியாக கூறியவாறே மரணிக்கிறார்.

### கற்பும் பெண்ணியமும்

பன்னெடுங்காலமாகவே பெண்ணின் கற்பு என்பது பொதுவெளியில் ஒரு பேசு பொருளாகவே உள்ளது. ஆயினும் அதன் பொருள் காலம் தோறும் மாற்றம் பெறுகிறது என்பதும் திண்ணம். தொல்காப்பியம் கற்பு என்ற சொல்லுக்கு

**'கற்பு எனப்படுவது கரணமொடு புணர'**[8]

என்ற பாடலில் ''வரைதலின் பின் இன்னவாறு ஒழுகுதல் வேண்டும் என இருமுது குரவரால் கற்பித்தலின் கற்பாயிற்று,'' (நச்சினார்க்கின்யார் உரையின் படி) என்ற பொருளில் வருகிறது. ஆயினும் சங்கப்பாடல்களாகிய பாட்டிலும் தொகையிலும் கற்பு என்னும் சொல் பெரும்பாலும் பெண்கள் ஆண் சமூகம் சொல்லும் சொல்லிற்கு ஏற்றபடி ஒழுக்க நெறியில் வாழ்தல் என்னும் பொருளிலேயே வந்துள்ளது.[9] கற்பு என்னும் சொல்லுக்கு கல்வி, கற்பனை, நீதிநெறி, மகளிர் நிறை, மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி, முறைமை, விதி[10] என்றும் பொருள்கள் இருப்பதாக தமிழ் மொழி அகராதி கூறுகிறது.

இவ்வாறு சங்க இலக்கியம் தொட்டு பாரதியின் வழியாக பாதை மாறி தற்போதைய புரட்சிப் பெண் எழுத்தாளர்கள் வரை கற்பின் வரையறை பலதரப்பட்டது. அந்த வகையில் ஜி நாகராஜனின் 'அக்கினிப் பிரவேசம்' (சாந்தி, மார்ச் 1967) என்ற சிறுகதையில் கற்பு என்பது மனம் சார்ந்தது; உடல் மட்டும் சார்ந்ததல்ல என்பதை உணர்த்தும் ஒரு கூற்று வைக்கப்பட்டிருக்கும். ஒரு தாயும் மகளும் பேசும் சம்பாஷனையே இக்கதை. ஏழைத் தாயும் அவளது மகளும் தனியே வாழும் நிலையில், தன்னை காப்பாற்றிக் கொள்ள வலுவிழந்த மகள் தன் பெண்மையை இழந்து விட்டதாகச் சொல்கிறாள். அம்மா அவளை தண்ணீரால் கழுவி அவள் களங்கத்தை துடைக்கிறாள். அப்பெண் தன் அம்மாவிடம் ''ஏம்மா, நான் மனசால் தப்பு பண்ணலைனியே, அது எப்படிம்மா உண்மையாகும்? மனசு திடமா இருந்திருந்தா இப்படி நடந்திருக்குமா?''[11] என்று கேட்கிறாள். ஆனால் அம்மா, கற்பு என்னும் கண்ணுக்குத் தெரியாத ஒன்றைக் காட்டிலும் தன் மகளின் எதிர்காலமே முக்கியம் என்று நினைப்பதால் அவள் கூற்றை மறுக்கிறாள்.

### கைம்பெண் வாழ்க்கை

'போலியும் அசலும்' (கண்ணதாசன், ஏப்ரல் 1973) என்ற சிறுகதை மூலம் கைம்பெண்ணின் அவலத்தை நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல் 'கல்லுப்பாட்டி' என்ற விதவை பெண்ணின் மூலம் சாடுகிறார் ஜி. என்.. அவளது மனதில் இருக்கும் புரையோடிய ஆசையையும், வீணாகிப் போன வாழ்வின் ஏமாற்றத்தையும், தவறிப்போன இளமையின் மீதான அதிருப்தியையும் அவள் நடவடிக்கைகளில் ஆசிரியர் அழகாக சித்தரித்து இருப்பார்.

### முடிவுரை

தமிழ்ச் சிறுகதை உலகில் விளிம்பு நிலை மனிதர்களை மையப்படுத்தி புனைவுகள் எழுதியவர் ஜி நாகராஜன். அவரது சிறுகதைத் தொகுப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில

*சிறுகதைகளில் உள்ள பெண்களின் பாத்திரப்படைப்பை திறனாய்வு செய்ததில், பல விதமான பெண்ணியக் கோட்பாடுகள் கதைமாந்தர்கள் வாயிலாக கையாளப்பட்டுள்ளன என்பது விளங்கியது. அவரது படைப்புகள் மூலம் பெண்ணின் உளவியல் உணர்வுகளை, சமூக கட்டுக்களுக்கு அடக்கி வைக்கும் பெண்களின் மனநிலையை உணர்த்துகிறார். கற்பு என்னும் கோட்பாட்டுக்கு இரு வேறு தலைமுறைகளைச் சேர்ந்த இரு பெண்களின் மூலம் அர்த்தம் கூறுகிறார். குடும்பத்தலைவியின் தியாகத்தை, அன்பை அங்கீகரிக்க மறுக்கும் ஆண் சமுதாயத்தை சாடுகிறார். சமூகத்தில் கவனிக்கப்படாத பாலியல் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை சமுதாய மதிப்பீடுகளின் சாயம் பூசாமல் அதன் வெளிப்படையான உண்மைத்தன்மையுடன் எடுத்துக்கூறுகிறார். ஜி நாகராஜன் தனது பெருவாரியான படைப்புகளில் பெண்களை மனதளவில் மிக வலிமையானவர்களாகவே காட்டியுள்ளார். அவரது அனைத்து சிறுகதைகளிலும் பெண்களின் மீதான மதிப்பீடு சிறப்பானதாகவே உள்ளது. அவரது படைப்பில் வரும் பெண் கதை மாந்தர்களும் சமூக அமைப்புகளால் அல்லது மரபுகளால் முடங்கியவர்களேயன்றி அவர்கள் தன்னளவில் குற்றமற்றவர்களே; சிறந்தவர்களே; உயர்ந்தவர்களே என்பதே ஜி. நாகராஜனின் பெண்ணியப் பார்வையாக உள்ளது.*

**சான்றெண் விளக்கப் பட்டியல்**


1. *சிவத்தம்பி, கா., தமிழில் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.15).*
2. *பிரேமா.இரா. சிறுகதை 1, தமிழ் இணையக்கல்விக்கழகம்.*
3. *மேலது.*
4. *நடராசன், தி.சு. பெண்ணியத் திறனாய்வு, தமிழ் இணையக் கல்விக்கழகம்*
5. *மேலது.*
6. *ஜி நாகராஜனின் படைப்பாக்கங்கள், 2023, பக்.369*
7. *ஜி நாகராஜனின் படைப்பாக்கங்கள், 2023, பக். 219*
8. *தொல்காப்பியம், கற்பியல், பா.எ.140*
9. *சந்திரன், ஆ. சங்க இலக்கியத்தில் கற்பு என்னும் சொல்லின் பொருள், பதிவுகள்,*
10. *கதிரைவேற்பிள்ளை, நா. தமிழ் மொழி அகராதி செம்பதிப்பு, பக். 425*
11. *ஜி நாகராஜனின் படைப்பாக்கங்கள், 2023 பக் 290*


**துணைநூற்பட்டியல்**


1. *சிவத்தம்பி, கார்த்திகேசு, தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், 1980.*
2. *பிரேமா, இரா. சிறுகதை 1. தமிழ் இணையக் கல்விக்கழகம்.*
3. *தேவகி, அ. படைப்பிலக்கியமும் சிறுகதையும், தமிழ் இணையக் கல்விக்கழகம்.*
4. *முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செண்ட்சுரி புக் ஹவுஸ், 2017.*
5. *ராஜ் கௌதமன், பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், நியூ செண்ட்சுரி புக் ஹவுஸ், 2018.*
6. *ராஜமார்த்தண்டன், ஜி நாகராஜனின் படைப்பாக்கங்கள், காலச்சுவடு பதிப்பகம், 2023.*
7. *ஞானமூர்த்தி, தா. ஏ. இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணை பதிப்பகம், 2019.*
8. *பஞ்சாங்கம், க. தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அன்னம் பதிப்பகம், 1991.*

9. நடராசன், தி. சு. பெண்ணியத் திறனாய்வு, தமிழ் இணையக் கல்விக்கழகம்
10. அனிதா, இரா. ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்ணிய விழுமியங்கள், சர்வதேச தமிழ் ஆய்விதழ், 2022.
11. சந்திரன், ஆ. சங்க இலக்கியத்தில் கற்பு என்னும் சொல்லின் பொருள், பதிவுகள், 2020.
12. வையாபுரிபிள்ளை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), பாரி நிலையம், 1967.
13. கதிரைவேற்பிள்ளை, நா. தமிழ் மொழி அகராதி செம்பதிப்பு, சாரதா பதிப்பகம், 2003.

**References**

1. Sivaththambi, Karthikesu. *The Origin and Development of the Short Story in Tamil*. Tamil Library, 1980.
2. Prema, R. *Short story 1*. Tamil Virtual Academy.
3. Devaki, A. *Creative Writing and Short Stories*. Tamil Virtual Academy.
4. Muthuchidambaram, *The Origin and Development of Feminism*. New Century Book House, 2017.
5. Raj Gowthaman, *Feminism History and Theories*. New Century Book House, 2018.
6. Rajamarthandan, *Works by G. Nagarajan*. Kalachuvadu Publishing House, 2023.
7. Gnanamoorthy, T. A. *Literary Criticism*. Ainthinai Publishing House, 2019.
8. Panjangam, K. *History of Tamil Literary Criticism*. Annam Publishing House, 1991.
9. Natarajan, T. S. *Feminist Critique*. Tamil Virtual Academy.
10. Anita, R. Feminist Virtues in Jayakanthan Short Stories. *International Research Journal of Tamil*, vol. 4, 2022.
11. Chandran, A. The meaning of the word chastity in Sangam literature. *Records,* 2020.
12. Vaiyapuri Pillai, *Sangam Literature (Songs and Poems)*, Pari Nilayam, 1967.
13. Kathiraiverpillai, N. *Tamil Language Dictionary*, Sarada Publishing House, 2003.